# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 04.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10368/D/2019**

திரு. P. பாலகிருஷ்ணன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், -- பொது அதிகார அமைப்பு
முதன்மைக்கல்வி அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 02.08.2019 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 04.09.2019 & 05.08.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 26.08.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 03.09.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 09.10.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு. P. பாலகிருஷ்ணன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு. ஆனந்தன், முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர், முதன்மைக்கல்வி அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், புதுப்பட்டு, அரசு மேல்நிலைப்பள்ளியில் வசூலிக்கப்படும் கட்டிடத்திற்கான கட்டணத்தொகையை, இப்பள்ளியில் பயிலும் மாணவர்களிடம் ஒவ்வொரு வருடமும் அரசின் அனுமதியுடன் வசூலிக்கப்படுகிறதா அல்லது பள்ளி நிர்வாகத்தின் மூலம் நிர்ணயம் செய்து வசூலிக்கப்படுகிறதா என்ற விவரம், தனது பிள்ளைகள் இப்பள்ளியில் 9ஆம் வகுப்பு மற்றும் 7ஆம் வகுப்பில் பயில்வதாகவும் இவர்களிடத்தில் பள்ளி கட்டிடத் தொகை வசூலிக்கப்பட்டதாகவும் ஆனால் அதற்குரிய இரசீது வழங்காததற்கான காரணம் பற்றியும், இப்பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ

மாணவியர்களுக்கு எதன் அடிப்படையில் கல்விக்கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது என்ற விவரம், பள்ளியில் தனது மகனுக்கு வருமானச் சான்று கோரப்பட்டதால், அது தொடர்பாக காலதாமதம் ஏற்பட்ட காரணத்தை தெரிவிக்க பள்ளிக்குச் சென்றபோது தலைமை ஆசிரியர் அவர்கள் பெற்றோர்கள் பள்ளிக்குள் வரக்கூடாது என்று கடிந்து கொண்டதாகவும், இது தொடர்பாக பள்ளி நேரத்தில் பெற்றோர்கள் பள்ளிக்குள் வரக்கூடாது என்பதற்கான அரசாணை நகல் இருப்பின் அவற்றின் நகல் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 4 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கெனவே தகவல்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், மேலும், புதுப்பட்டு, அரசு மேல்நிலைப்பள்ளியில் வசூலிக்கப்படும் கட்டிடத்திற்கான கட்டணத்தொகையை, இப்பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களிடம் ஒவ்வொரு வருடமும் அரசின் அனுமதியுடன் வசூலிக்கப்படுகிறதா அல்லது பள்ளி நிர்வாகத்தின் மூலம் நிர்ணயம் செய்து வசூலிக்கப்படுகிறதா என்ற விவரம், தனது பிள்ளைகள் இப்பள்ளியில் 9ஆம் வகுப்பு மற்றும் 7ஆம் வகுப்பில் பயில்வதாகவும் இவர்களிடத்தில் பள்ளி கட்டிடத் தொகை வசூலிக்கப்பட்டதாகவும் ஆனால் அதற்குரிய இரசீது வழங்காததற்கான காரணம் பற்றியும், இப்பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கு எதன் அடிப்படையில் கல்விக்கட்டணம் நிர்ணயம் செய்யப்படுகிறது என்ற விவரம், பள்ளியில் தனது மகனுக்கு வருமானச் சான்று கோரப்பட்டதால், அது தொடர்பாக காலதாமதம் ஏற்பட்ட காரணத்தை தெரிவிக்க பள்ளிக்குச் சென்றபோது தலைமையாசிரியர் அவர்கள் பெற்றோர்கள் பள்ளிக்குள் வரக்கூடாது என்று கடிந்து கொண்டதாகவும், இது தொடர்பாக பள்ளி நேரத்தில் பெற்றோர்கள் பள்ளிக்குள் வரக்கூடாது என்பதற்கான அரசாணை இருப்பின் அவற்றின் நகல் உள்ளிட்ட விவரங்களை தகவல்களாக பெற்று வழங்குமாறு கோரினார்.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரர் அவரது மனுவில் கோரிய தகவல்களுக்கு உரிய தகவல்களை வழங்க கள்ளக்குறிச்சி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது. மேலும், பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் பிற ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கற்பித்தல் மற்றும் நல்லொழுக்கம் போன்ற நற்செயல்களை உணர்த்தும் வகையில் பள்ளியின் செயல்பாடுகள் இருக்கவேண்டும் என்றும், பள்ளியின் செயல்பாடுகள் அனைத்தும் தலைமையாசிரியரின் பொறுப்பைச் சார்ந்தவை என்றும், தலைமையாசிரியர் என்பவர் மற்ற ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் ஒரு முன் உதாரணமாக செயல்பட வேண்டுமென்றும், தலைமையாசிரியர் மற்ற ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும், மாணவர்களின் பெற்றோர்களிடத்திலும் சுமூகமான முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்றும் இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 10368/D/2019**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத் தகவல் அலுவலர் /
முதன்மைக்கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்,
முதன்மைக்கல்வி அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம்.

**மனுதாரர்:-**

திரு. P. பாலகிருஷ்ணன், த/பெ. பிச்சக்காரன்,
பிள்ளையார் கோவில் தெரு,
புதுப்பட்டு கிராமம் & அஞ்சல்,
சங்கராபுரம் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 606 402.

Copy to: File
SNPA 06.11.2020